# ரம்புக்கனை பிரதேச சபை

## கேகாலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜுன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரம்புக்கனை சேமிப்பு வங்கியில் வைப்பு செய்திருந்த ரூபா. 5,000,000 நிலையான வைப்புக்கான மீளாய்வாண்டிற் குரிய பெற வேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படாததனால் வருமானம் ரூபா. 241,506 குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான சொத்து பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த ரூபா. 145,475 பெறுமதியான 2 வாகனங்கள் மற்றும் இயந்திரம் ஒன்று கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக மோட்டார் வாகனம் மற்றும் வண்டிக் கணக்கு, இயந்திரக் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு முறையாக ரூபா. 75,475 வினால் ரூபா. 70,000 வினால் மற்றும் ரூபா.145,475 வினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டினுல் ரூபா. 21,000 பெறுமதியான 02 காணி மற்றும் 01 கட்டிடம் கைப்பற்றப்பட்டிருந்தும் அச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட படி காட்டப்பட்டிருக்காததால் காணி கட்டிடம் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு ரூபா. 21,000 வினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டிய முத்தரைக் கட்டணம் ரூபா. 28,672,949 வினை ரூபா. 11,143,299 வாக கணக்கீடு செய்யப்யட்டதனால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வருமான கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதி ரூபா. 17,529,650 வினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டிய நீதிமன்றக் குற்றப்பனம் ரூபா. 2,221,084 வினை ரூபா. 2,144,998 என கணக்கீடு செய்யப்பட்டதனால் வருமான கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதி ரூாப. 76,086 வினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முற்பணமாகப் பெறப்பட்ட வருமானம் ரூபா.1,195,397 ஆயினும் ரூபா.1,030,890 என கணக்கீடு செய்யப்பட்டதால் நடைமுறைப் பொறுப்பு ரூபா.164,507 குறைவாகவும் மற்றும் மீளாய்வாண்டின் முற்பணம் அப் பெறுமதியினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) பெகோ இயந்திரம், மோட்டர் கிரேடர் இயந்திரம் மற்றும் பெப்கெட் இயந்திரங்கள் மூலம் கிடைத்த ரூபா. 306,525 வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாததால் வருடத்தின் வருமானம் அப் பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2015 வருடத்திற்கு கிடைக்கப் பெற்ற ரூபா. 87,975 பெகோ இயந்திர வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாததால் வருடத்தின் வருமானம் அப் பெறுமதியினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நிலையான சொத்துப் பதிவேட்டின் படி கானப்பட்ட ரூபா. 111,329,566 பெறுமதியான காணி மற்றும் கட்டிடம் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் காணி மற்றும் கட்டிடம் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகளில் அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கடந்த வருட செலவு, மீளாய்வாண்டின் செலவாக காட்டப்பட்டிருந்ததான் காரணமாக மீளாய்வாண்டின் செலவு ரூபா. 141,105 வினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிற் குரிய செலவு ரூபா. 14,005 கணக்கீடு செய்யப்படாததால் வருடத்தின் செலவு அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.3.2 <u>இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

12 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதி ரூபா. 125,372,627 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கையின் பிரகாரமும் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 152,670,019 ஆகவும் இருந்தது அத்துடன் ரூபா. 27,297,392 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.3.3 <u>பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகள்</u>

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் 01 வருடத்திற்கு மேலான காலங்கடந்த பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி முறையாக ரூபா. 2,380,507 மற்றும் ரூபா.12,992,589 ஆகும்.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் 158(1) | ஒரு வருடத்திற்கு மேலான காலப் பகுதியிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.1,350,000 வரிப்பணத்தினை அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 56 இலக்கம் மற்றும் 2000 53 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் சீரமைக்கப்பட்ட 1980 47 ஆம் இலக்கத்தினையுடைய சூழல் சட்டம் மற்றும் 2008 ஜனவரி 25 திகதி இலக்கம் 1533/16 வர்த்தமானி பத்திரிகை மற்றும் அச்சட்டத்தின் அதிகாரத்தினை நடைமுறைப் படுத்தப்படுவது தொடர்பான ஆலோசனை 1.2 மற்றும் 1.1.6 பிரிவு. | அனுமதிப்பத்திரக் காலவரையறை முடிவுற்று இருந்த 27 தொழில்கள் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கத் தவறியிருந்ததுடன் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

திகதி அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகை

(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(i) நி.கோ.371 (2) ஆ

குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பெறப்பட்ட முற்பணம் வேலை முடிவுற்ற உடன் தீர்க்கப்பட வேண்டியிருந்தும் 2016 திசம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா.1,434,148 ஆகும்.

(ii) நி.கோ.396 (ஈ)

வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்ததும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத பெறுமதி ரூபா. 84,254 ஆன 55 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ii) நி.கோ.1646

தினசரி ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்தம் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் 12 வாகனம் தொடர்பாக ஓட்டக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை xxiv அத்தியாயம் 10.4 ஆவது பிரிவு

சேவையினை விட்டுச் சொன்ற அதிகாரி ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.58,300 ஊழியர் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(உ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1597/8 மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம்

தொலைத் தொடர்பு கோபுரங்கள் நிர்மானிக்கின்ற போது அவற்றின் உயரத்திற்கு ஏற்ப அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் மற்றும் செயன் முறைக் கட்டணம் அறவிட

| | |
|---|---|
| வேண்டியிருந்தும் அதிகார எல்லையினுல் பொருத்தப்பட்டுள்ள 14 தொலைத் தொடர்பு கோபுரங்கள் | தொடர்பாக ரூபா. 352,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 20,595,422 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 20,327,341 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 268,081 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 268,081 தொகை பின்னடைவுக்கு 05 வருமான விடயங்களின் அதிகரிப்பும் 04 செலவின விடயங்களில் வீழ்சியும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.12.31 இல் நிலுவை<br>2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 2,205 | 855 | 5,740 | 5,116 | 1,350 | 624 | 1,974 |
| ii | வாடகை | 751 | 32 | 8,189 | 8,237 | 719 | (48) | 671 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 13 | 13 | 3,578 | 3,578 | - | - | - |
| iv | ஏனைய வருமானம் | 19,278 | 31,016 | 78,126 | 50,854 | (11,738) | 27,272 | 15,534 |
| | மொத்தம் | 22,247 | 31,916 | 95,633 | 67,785 | (9,669) | 27,848 | 18,179 |

0

1

2.3.2 <u>வேறு வருமானம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) <u>தொலைத் தொடர்பு கோபுர வருமானம்</u>

தொலைத் தொடர்பு கோபுரம் நிர்மானித்து நடாத்திச் செல்வதற்காக ஒரு கோபுரத்திற்கு ரூபா. 3,000 வருடாந்த வரி அறவிட வேண்டியிருந்தும் அவ்வாறான 08 கோபுரங் தொடர்பாக 2015 மற்றும் 2016 வருடத்திற்காக ரூபா. 48,000 வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) <u>அறிவித்தல் பதாகை வருமானம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(i) சபை அதிகார எல்லையில் விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைப்பது தொடர்பாக எழுத்து மூலமான அனுமதிப்பத்திரம் பெற வேண்டியிருந்தும் அவ்வாறான அனுமதி பெறாது காட்சிப்படுத்தப்பட்ட 14 விளம்பர அறிவித்தல் பதாகைகள் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா. 153,225 வினை அறவிட்டிருக்கவில்லை.

(ii) தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான விளம்பரங்கள் மிக அதிமான அளவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றிட்கு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(iii) காணி ஏல விற்பனை தொடர்பாக காட்சிக்கு வைப்பதற்கு அனுமதி பெற்றுக் கொண்ட அளவினைவிட 30 விளம்பர அறிவித்தல்கள் கட்டணம் செலுத்தாது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

(iv) வெவ்வேறு வியாபார நிறுவனங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் விளம்பர அறிவித்தல்கள் தொடர்பாக ரூபா.108,000 அறவிட வேண்டியிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

2.3.3 <u>நீமன்ற குற்றப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்</u>

மாகாண சபையின் பிரதான செயளாலர் மற்றும் வேறு அதிகாரிகளிடமிருந்து 2016 திசம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற அபராதம் ரூபா. 2,097,714 மற்றும் முத்தரைக் கட்டணம் ரூபா. 5,600,783 ஆகும்.

3 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>செயற்திறன்</u>

2013 வருடம் சிறு நகர அபிவிருத்திட்டத்தின் கீழ் மாகாண சபை ஒதுக்கீடின் பிரகாரம் ரூபா. 23,746,095 செலவு செய்து 2014 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வேலை முடிந்திருந் ரம்புக்கண வாரச் சந்தை 2017 மே 31 திகதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்காது பழைய வாரக் சந்தையிலேயே சந்தை நடாத்திச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது.

3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் சேவையாற்றும் 17 தற்காலிக ஊழியர்களுக்கு 2014 ஒக்டோபர் முதல் ஊழியர் சேமலாப நிதியத்தில் உறுப்பினராகியிருந்ததுடன் அவ்வூழியர்களுக்காக 2014 ஒக்டோபர் முதல் 2016 திசம்பர் வரை

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு சபையின் பங்களிப்பான ரூபா. 81,023 வினைச் செலுத்தியிருந்தது.

(ஆ) புதிய சந்தைத் தொகுதியில் நிர்மானிக்கப்படுகின்ற 11 கடைகள் வழங்கும் போது ஒப்பந்தத்தில் மாதாந்த வாடகையினை குறிப்பிட்டிருக்கவில்லை.

(இ) 1997 வருடம் மற்றும் 2015 வருட காலத்தினுல் ஊழியர் கடன் பெற்றுக் கொண்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற 09 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டய மொத்தக் கடன் ரூபா. 259,528 ஆகும்.

(ஈ) 2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு 13 பதவி வகையில் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 90 ஆக இருந்ததுடன் இருக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை 86 ஆகும். அனுமதிக்கப்பட்ட ஊழியர் குழாத்தினுல் 10 பதவி வகையில் அதிகாரிகள் /ஊழியர்கள் 17 பேரினது பற்றாக்குறை காணப்படுவதுடன் 03 பதவி வகையில் அதிகாரிகள் /ஊழியர்கள் 13 பேரினது மேலதிகமும் காணப்படுகின்றது.

3.3 <u>செயற்பாட்டு செயற்திறனின்மை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகார எல்லையினுல் காணப்படும் 07 வேலைகள் தற்பொழுது செயற்படும் நிலையில் காணப்படாததனால் அனுமதிப் பத்திர பதிவேட்டில் இருந்து அகற்றப்பட்டிருப்பதுடன் அவை உண்மையில் தற்பொழுது செயற்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2015 நவம்பர் 20 ஆம் திகதி 1942 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை மூலம் தற்காலிக அறிவித்தல் பதாகைகள் ஒரு மாதத்திற்கு மேலதிகமாக காட்சிக்கு வைக்கப்படுமாயின் அறவிட வேண்டிய தொகை நிச்சயக்கப்பட்டிருக்கவில்லையினால் ஒரு மாதத்திற்கு மேலதிகமாக காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களின் மூலம் கிடைக்க வேண்டிய கட்டணம் கிடைத்திருக்கவில்லை.

(இ) புதிய சந்தைத் தொகுதி வேலை முடிவுற்ற 05 கடைகள் பழைய கடை உரிமையாளரினால் திறக்கப்பட்டிருந்தாயயினும் 2016 மார்ச் 15 ஆம் திகதி முகாமைத்துவ குழுக் கூட்ட தீர்மானத்தின் படி ரூபா. 2,182,500 கீ மணி ( key money) மற்றும் ரூபா.208,000 கடை வாடகை அறவிடுவதற்கு மற்றும்

கடை உரிமையாளருடன் வருததற்கு 2017 பெப்ரவரி 06 திகதி வரையும் நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் வருடம் மற்றும் 2016 வருடத்தினுல் சபை அதிகார எல்லையினுல் 20 காணி ஏக்கர் விற்பபை செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக 2005 ஜுன் 01 ஆம் திகதி 2005/04 இலக்கத்தினையுடைய சபரகமுவ மாகாண ஆணையாளரின் சுற்றுநிருபம் மூலம் சபை அதிகார எல்லையினுல் காணி விற்பனை மீது வரி அறவிடப்படும் போது அனுமதிக்கப்பட வேண்டிய நடைமுறை விளக்கமாக முன்வைக்கப்பட்டிருந்தும் அதற்கு மாற்றமாக செயற்பட்டதனால் தொகுதியாக்கல் திட்டத்தினை அனுமதித்துக் கொள்வதற்கு முன்னர் வருமானப் பரிபாலகரின் தற்காலிக மதிப்பீட்டின் படி நூற்றுக்கு 01 வீத வைப்புப் பணம் பெறப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. காணி தொகுதியாக்களின் போது காணி உறுதிப் பத்திரம் இலக்கம் போன்ற விபரங்கள் உள்ளடங்கிய அறிக்கையுடன் குறிப்பிட்ட வரியினை செலுத்துவதாக ஒப்பந்தம் செய்ய வேண்டியிருந்தும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் 03 மாதத்தில் கொடுப்பனவு செய்வதாக நிபந்தனை உட்படுத்தப்பட்டிருந்தது. மேற் கூறப்பட்ட சுற்றுநீருபம் (X) பிரிவின் பிரகாரம் சபையின் வருமானப் பரிபாலகரினால் விற்பனையாளர் வழங்கியிருந்த தகவல்களின் உண்மைத் தன்மையினை காணிப் பதிவு செய்யும் காரியாலயத்தினால் உறுதிப்படுத் கொள்ள வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யாததுடன் காணி உறுதிப் பத்திரத்தின் பிரதியினைப் பெற்றுக் கொண்டும் இருக்கவில்லை.

(உ) ரம்புக்கனை பண்டாரவத்தயில் 12 ஏக்கர் மற்றும் 02 ரூட் 19 பேர்ச்சஸ் 145 காணித் ாெதகுதகள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அத்துடன் ஒரு பேர்ச்சஸ் அலகு விற்பனை மதிப்பீடுப் பெறுமதியினை விட விற்பனை விலை ரூபா. 20,000 முதல் ரூபா. 50,000 வரையில் அதிகமானதாக இருந்தது உறுதியானது. அதன் படி விற்பனைப் பெறுமதியினை உறுதிப்படுத்தாது நூற்றுக்கு 01 வரி அறவிடப்பட்டதால் குறைந்த பட்ச்சமாக ரூபா.307,800 நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்தது. அவ்வாறே சபை அதிகார எல்லையினுல் விற்பனை செய்யப்பட்ட 3 காணிகள் அதாவது 819 பேர்ச்சஸ் 86 காணித் தொகுதி தொடர்பாக விற்பனைப் பெறுமதி உறுதிப்படுத்தி நூற்றுக்கு 01 வீத வரி அறவிட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை சனநாயக குடியரசின் 1986 மார்ச் 10 ஆம் திகதி 392/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 1978 ஆம் வருட 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் உத்தரவின் 22(1) ஆம் இலக்கப் படி ஹெக்டயார் ஒன்றுக்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் பாதைக்கு விடப்பட்டதன் பின்னர் காணியின் அளவில் நூற்றுக்கு 10 வீதத்திற்கு குறையாத அளவில் சமூக மற்றும் களியாட்ட நடவடிக்கைகளுக்காக பொருத்தமான இடம் ஒதுக்க வேண்டியிருந்தும் காணி இரண்டுக்குரிய மேற்கூறப்பட்ட படி நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக பொது பயன்பாடு தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியினை குறைத்தன் பின்னர் மிகுதியில் நூற்றுக்கு 10 வீதம் ஒதுக்கியிருந்ததன் காரணமாக ரூபா. 957,500 குறைந்த பெறுமதியான 19.15 பேர்ச்சஸ் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

3.4 <u>திண்மக் கழிவு முகாமைத்துவம்.</u>

பிரதேச சபை அதிகார எல்லையினுல் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் மூலம் கொம்போஸ்ட் உற்பத்தி தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் திட்டம் வனப் பாதுகாப்பு தினைக்களத்திற்குரிய காணி வருடாந்த வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட்டதுடன், அவ்விடயம் தொடர்பாக சபைக்கு நிலையான நிலம் ஒன்று இருக்கவில்லை. அவ்வாறே கொம்போஸ்ட் உற்பத்தியின் பின்னர் மிகுதியாகும் கழிவுகளை அந்நிலத்திலேயே அகற்றுவதுடன் பிரதேசத்தினுல் காணப்படுகின்ற கழிவுகளை முகாமைத்துவம் செய்து அகற்றுவதற்கு பொது மக்களுக்கு அறிவுருத்தப்பட்டிருந்தும் சபையினால் கழிவுகளைப் பிரித்து சேகரிக்காதது அவதானிக்கப்பட்டது.

4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்</u>

4.1 <u>சொத்துக் கட்டுப்பாடு</u>

ஊள்ளுராட்சி அமைச்சரவையினால் கிடைக்கப் பெற்ற சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா. 26,610,000 பெறுமதியான 04 வாகனங்கள் சபரகமுவ மாகாண சபையினால் கிடைக் பெற்ற ரூபா.12,695,150 பெறுமதியான 07 வாகனம் சபைக்கு உரிமையாக்கிக் கொள்ள நடவடிக்கை மேற் கொள்ளாததுடன் அச் சொத்துக்களை கணக்குகளில் உட்படுத்தியிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமாப்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 43 தொடர்பாக மொத்தம் ரூபா.9,942,000 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 15 தொடர்பாக நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 80 இருந்து 99 வரை பெறுமதியின் அடிப்படையில் ரூபா.6,792,971 மிகுதியாக இருந்ததுடன் அதன் படி ரூபா.16,734,971 ஒதுக்கீடு சபை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

சபை நடவடிக்கை தொடர்பாக போதுமான உள்ளக் கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) வைப்புக்கள்,முற்பணம்,ஊழியர் கடன், கடன கொடுத்தோர் பதிவேடுகள் பதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிலையான சொத்து பதிவேடுகள் பதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) அட்டுறு வருமானம் மற்றும் செலவு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | செலவு ஒதிக்கீடுகளில் கவனத்திற் கொள்ளக் கூடியளவில் மிகுதியாக இருந்தது. |
| (இ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சில விளம்பர பதாகை தொடர்பாக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (iii) | சில தொடர்பாக வேலை தொடர்பாக அனுதிப்பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) வாகன நிர்வாகம் | (i) | நாளாந்த செலுத்தும் பதிவுப் புத்தகம் துப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | வாகன லொக் புத்தகம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |